**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 206 /2024**

**Deposition of P.W.** 5

Name : திருமதி. அருள்ரோஸ்சிங்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**29.04.2026**

**A2 dispensed. A6 Present. A5, A7, A8, absent. Petition filed and allowed.**

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது சென்னை பொருளாதார குற்ற பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறனே். இதற்கு முன்னர் கொற்றிக்கோடு காவல்நிலையத்தில் பணியாற்றிய போது 04.06.2011ம் தேதி 11.30 மணிக்கு மேக்கோடு கிராம நிர்வாக அலுவலகர் திரு. ராஜேந்திரன் என்பவர் நிலையம் நேரில் ஆஜராகி கொடுத்த புகார் மனு, மோகன்தாஸ் என்பவர் பெயரிலுள்ள டிரிப்சீட்டுகள், கனகராஜ் என்பவரின்ஓட்டுனர் உரிமம் நகல், அனிதா ராஜபாய் என்பவர் பெயரிலுள்ள டிரிப்சீட்டுகள், மற்றும் திரியுடன் கூடிய டெட்டனேட்டர்கள் (3) ஆகியவற்றை பெற்று புகார் மனுவின் தன்மை படி கொற்றிக்கோடு காவல்நிலைய குற்ற எண். 86/2011 பிரிவுகள் 3 (II), (III) தமிழ் நாடு பொதுசொத்துக்களை சேதப்படுத்துவடிதை தடை செய்யும் சட்ட படியும், பிரிவு 3(a), 5(a), வெடிபொருள் சட்டப்படியும், பிரிவு 4(1) 4(1–A), 21 (1) உ/இ 36(4) (1) கனிமவளச்சட்டம் மற்றும் பிரிவின் படியும், 465, 468, 471, 379 இ.த.ச படியும் வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3, முதல் தகவல் அறிக்கையின்

அசலையும், புகார் மனுவையும் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

காவல் ஆய்வாளர் என்னை 04.06.2011ம் தேதி விசாரித்தார். காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார் நேரம் ஞாபகமில்லை. அ.சா.1 புகார் கொடுக்க 11.30 மணிக்கு நிலையத்திற்கு வந்தார். புகார் மனுவை எங்கு வைத்து எழுதினார் என்று எனக்குத் தெரியாது. கைப்பற்றப்பட்ட பொருட்களை அ.சா.1 தான் என்னிடம் ஒப்படைத்தார். சம்பவம் 31.05.2011ம் தேதி காலை 06.00 மணி என்றால் சரிதான். சம்பவம் நடந்து 5 நாட்களுக்கு பிறகு புகார் கொடுக்கப்பட்டது என்றால் 4வது நாள் கொடுக்கப்பட்டது. முதல் தகவல் அறிக்கையை அதே தேதியில் தபாலில் அனுப்பி விட்டேன். அதே தேதியில் முதல் தகவல் அறிக்கை அனுப்பவில்லை என்றால் சரியல்ல. வெடிபொருள் சட்டப்படியான வழக்கை உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்று தெரியும். நான் சொன்னது போல் புகார் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விபர கணக்கிற்காக பொய் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. 2வது எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>5வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

ஆய்வாளர் விசாரணையில் சம்பவ தேதியை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 31.05.2011ம் தேதி சம்பவம் நடந்ததாக புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. காலதாமதத்திற்கு காரணம் எதுவும் குறிப்பிடவில்லை. புகார்மனுவுடன் கொடுத்த பொருட்களை எங்கு வைத்திருந்தார் என்று நான் விசாரிக்கவில்லை. தவறான தகவலின் அடிப்படையில் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல 5வது எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>6வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

முதல் தகவல் அறிக்கையில் நீதிமன்றத்திற்கு அனுப்பபட்ட நாளையும் நேரத்தையும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்திலிருந்து 7 கி.மீ தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். 04.06.2011ம் தேதி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை 06.06.2011ம் தேதி நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பின் ஆலோசனையின் பேரில் முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளதால் நீதிமன்றத்திற்கு காலதாமதமாக வந்துள்ளது என்றால் சரியல்ல. 6வது எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>7வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

2, 5, 6 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.

**<u>8வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

பொருட்களை எங்கிருந்து எடுத்து வந்தார் என்று எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் அது சம்மந்தமாக நான் விசாரிக்கவில்லை. புகாரில் மனித உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய என்ற வாசகம் இடம் பெற்றுள்ளதா என்றால் இல்லை. புகாரில் எந்த சர்வே எண்ணில் கல்குவாரி நடத்த அனுமதி வழங்கப்பட்டிருந்தது என்று குறிப்பிட்டுள்ளார். 8வது எதிரி அனுமதியில்லாத இடத்தில் கல்குவாரி நடத்தவில்லை என்றால் சரியல்ல. பொய்யான புகாரின் பேரில் 8வது எதிரியை தவறுதலாக வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.